1972 நவம்பர் 13]

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த மூன்றாண்டுக் காலமாக இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலுள்ள சில வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை யென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்தகைய வகுப்புகளின் பெயர்கள் யாவை ?

(உ) பின்தங்கிய வகுப்புகள் அனைத்திற்கும் சமமான பிரதி நிதித்துவம் அளிப்பதற்கேற்ற முறை பின்பற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) சாதி அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாண வர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லையாதலால் ஒவ்வொரு பின் தங்கிய வகுப்புக்கும் தனித்தனியாக இடம் ஒதுக்க இயலாது. அப்படி ஒதுக்குவது அரசியல் அமைப்பு 15(4) விதிமுறையை மீறு வதாகும்.

Rajah Mirasdar (Government) Hospital, Thanjavur

* 273 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the X-ray Department of Rajah Mirasdar (Government) Hospital, Thanjavur is handicapped due to repair of the compression motor of the cooling plant ;

(b) if so, the period for which it is under repair; and

(c) the action proposed to be taken thereon?

@ 60-65 பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

இராஜா மிராசுதார் (அரசு) மருத்துவ மனை, தஞ்சாவூர்

திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், இராஜா மிராசுதார் (அரசு) மருத்துவ மனையிலுள்ள குளிரூட்டு இயந்திரத்தின் அழுத்த மோட்டார் **(Compression motor of the cooling plant)** பழுதான காரணத்தால் இம்மருத்துவ மனையின் எக்ஸ்ரே துறைப் பணிகள் தடைப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அந்த மோட்டார் எவ்வளவு காலமாகப் பழுதடைந்த நிலையிலுள்ளது ?

(உ) அதையொட்டி, எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 1970, ஆகஸ்டு திங்கள் முதல் அந்தக் கருவி பழுதடைந்திருந்தது.

(உ) கிண்டி மின்-மருத்துவ சாதனங்களுக்கான செப்பனிடுதல்—பழுது பார்க்கும் பிரிவிடம் இந்த இயந்திரம் 31—8—1970 முதல் ஒப்படைக்கப்பட்டு முறையாகப் பழுது பார்க்கப்பட்டபின் 4—11—1971-ல் திரும்பப் பெறப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்ட காலத்தில் எக்ஸ்-கதிர்த்துறை இடையூறின்றிப் பணியாற்றியது.

Incidence of rabies in Coonoor area

* 274 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the incidence of rabies in Coonoor area in this State; and

(*b*) if so, the action taken thereon?